## *புனித கோர்ஸினி பெலவேந்திரர் (1302 – 1373)*

கடவுளை அன்பு செய்யவும் அவருக்கு பயந்து நடக்கவும் பெற்றோர் இவருக்கு கற்பித்தனர். இவரோ அவர்களது போதனைகளை பொருட்படுத்தாமல், விளையாட்டுகளையும் இன்ப சுகங்களையும் விரும்பி பதினான்காம் வயதில் எல்லோருக்குமே சொல்ல முடியாத தொல்லை கொடுத்து வந்தார். பரிசுத்த கற்புக்கு விரோதமான பாவங்களை பயமின்றி செய்து வந்தார். தாயும் தகப்பனும் கண்ணீர் வடித்தார்கள். புத்திமதி சொன்னார்கள். தண்டித்தார்கள். ஒன்றும் பயனில்லை. ஒரு நாள் இவருடைய தாய் இவரைக் கடிந்துகொண்டதற்கு தாலையத் தாறுமாறாகத் திட்டினார். கோபத்துடன் அவர் வெளியே செல்ல இருக்கையில் தாய் அவரைப் பார்த்து "மகனே நான் கனவில் கண்ட ஓநாய் போலவே நீ ஒழுகுகிறாய் நீ சீக்கிரம் செம்மறியாக மாற வேண்டும்" என்றனள். பெலவேந்திரர் வெளியே போகவில்லை. சிந்திக்கலானார். தாய் சொன்னதன் பொருளை அறிய விரும்பினார். "மகனே நீ பிறப்பதற்கு முந்தின இரவில் நான் ஒரு கனவு கண்டதில் மானிடக் குழந்தையல்ல. ஆனால் ஓர் ஓநாய் எனக்கு பிறந்திருப்பதாக கனவு கண்டேன். அந்த ஓநாய் கோவிலுக்குள் ஓடியது. அது வெளியே வருகையில் செம்மறியாக மாறிவிட்டது. மகனே உன்னையே திருத்திக்கொள். பாவ வாழ்வை விட்டுவிடு. இயேசுவுக்கும், மரியாளுக்கும் நாங்கள் உன்னை அர்ப்பணம் செய்தோம். அவர்களிடம் திரும்பி வா" என்று தாய் மொழிந்தாள். கடவுளது அருள் இளைஞனது உள்ளத்தைத் தொட்டது. மனம் திரும்பினான். பின்னர் குருவாகி அதன்பின் ஆயரானார். எதிரிகளை சமாதானப்படுத்தி வைப்பதில் பெரும் புகழ் பெற்றார். ஏழைகளை மிக மிக நேசித்தார். கையில் ஒரு சிலுவையையும், அருகில் ஓநாயையும், பாதத்தின் அருகில் ஒரு செம்மறியையும் அவரது படத்தில் பார்க்கலாம்.

**சிந்தனை:**

சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர், தனி நபர்களிடையே ஏற்படும் பிளவுகளை நம் செல்வாக்கைப் பயன்படுத்தி சீர்படுத்துவோம்.

**செபம்:**

ஆண்டவரே, மக்களை சமாதானப்படுத்தும் வரத்தை எனக்குத் தாரும்.